www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

**கர்நாடக சங்கீதம் I**
**Music I**

**Two Hours**
**Gr -13 (2023)**

**55 | T | I**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

**பகுதி – I**

❖ **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. அவனத்த வாத்தியம் எனப்படுவது.
   1) நரம்புக்கருவி 2) தோற்கருவி 3) துளைக்கருவி
   4) கஞ்சற்கருவி 5) சாதக வாத்தியக்கருவி

02. 72 மேளகர்த்தாவில் நான்காவது சக்கரத்தில் வரும் 3வது இராகம்.
   1) கீரவாணி 2) கரகரப்பிரியா 3) நடபைரவி 4) மேசகல்யாணி 5) ஜங்காரத்வனி

03. பெரிய புராணம் பாடப்படும் இராகத்திற்கு இணையான பண்
   1) பழம் பஞ்சுரம் 2) முல்லை 3) பைரவம்
   4) செந்துருத்தி 5) புறநீர்மை

04. “தஞ்சம் என்றலே” என்னும் ஆபோகி ராக வர்ணத்தினை இயற்றியவர்
   1) பாபநாசம் சிவன் 2) ஸ்வாதித்திருநாள் மகாராஜா 3) டைகர் வரதாச்சாரியார்
   4) பட்டணம் சுப்பிரமணி ஐயர் 5) லால்குடி ஜெயராமன்

05. “பாஹிமாம் ஸ்ரீ” எனத் தொடங்கும் சௌக்காளக் கிருதியின் அனுபல்லவி அமைந்துள்ள எடுப்பு.
   1) சமம் 2) அதீதம் 3) அனாகதம் 4) சப்தகம் 5) சமவிராமம்

06. துவி அன்னியஸ்வர பாஷாங்கராகமாவது.
   1) அடானா 2) பிலகரி 3) காபி 4) பைரவி 5) கமாஸ்

07. மூன்று ஸ்வரங்கள் விலக்கப்பட்டு நான்கு ஸ்வரங்களை உடைய இராகப் பிரிவு.
   1) ஔடவ ஷாடவம் 2) சம்பூர்ணம் 3) ஔடவஔடவம்
   4) விவாதி ராகம் 5) ஸ்வராந்தரம்

08. ஸ்வரங்கள், வார்த்தைகள் ஜதிகள் என்பவற்றை சரணத்தில் கொண்டுள்ள உருப்படி
   1) பதம் 2) தில்லானா 3) அஷ்டபதி
   4) ஜாவளி 5) திருப்புகழ்

09. “பொன்னும் மெய்ப்பொருளும்” எனும் தேவாரம் அமைந்த பண்
   1) முல்லை 2) குறிஞ்சி 3) தக்கேசி 4) புறநீர்மை 5) காந்தாரம்

10. சங்கீர்ண ஜம்பை தாளத்தின் மொத்த எண்ணிக்கை
   1) 12 2) 10 3) 14 4) 29 5) 20



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11. விவாதி தோஷமற்ற மேளங்களின் எண்ணிக்கை
 1) 40  2) 30  3) 36  4) 32  5) 72

12. பஞ்சரத்தினக் கிருதிகளில் இறுதிக் கிருதி அமைந்துள்ள இராகம்.
 1) ஸ்ரீ  2) நாட்டை  3) கௌளை  4) ஆரபி  5) வராளி

13. ஹிந்துஸ்தானிய இசையில் தராளா என அழைக்கப்படும் உருப்படி
 1) ஜாவளி  2) அஷ்டபதி  3) தில்லானா  4) பதம்  5) கிருதி

14. 72 மேளகர்த்தாவில் பவப்பிரியா, சுவர்ணாங்கி, திவ்யமணி ஆகிய இராகங்கள் இடம்பெறும் சக்கரம்
 1) அக்னி  2) வஸு  3) திஸி  4) பாண  5) ருத்ர

15. சமஷ்டி சரணம் அமைந்துள்ள உருப்படிகளுள் இடம் பெறாத அங்கம்
 1) பல்லவி  2) உபபல்லவி  3) அனுபல்லவி  4) சரணம்  5) அனுசரணம்

16. “வலசி” எனத் தொடங்கும் இராகமாலிகை வர்ணத்தில் யதுகுலகாம்போதி இராகம் இடம் பெறும் பகுதி
 1) பல்லவி  2) உபபல்லவி  3) அனுபல்லவி
 4) முத்தாயிஸ்வரம்  5) முதலாவது சரணம்

17. ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் பயன்படுத்தப்பட்டால்
 1) ஸங்கதி  2) மடக்கு / யமகம்  3) அனுப்பிராசனம்
 4) ஸ்வராட்சரம்  5) வின்னியாசம்

18. “ஸார்வபௌமனே” என்ற அனுபல்லவி அமைந்துள்ள கிருதியின் இராகம்.
 1) அம்சத்வனி  2) பிலகரி  3) சண்முகப் பிரியா
 4) ஆரபி  5) கீரவணி

19. ஆரோகண அவரோகணத்தில் பஞ்சமம் மட்டும் வர்ஜமாக உள்ள இராகம்.
 1) ஸ்ரீறஞ்சனி  2) ஆபோகி  3) ஆனந்தபைரவி
 4) ஸாவேரி  5) ஸ்ரீராகம்

20. ஒரு இராகத்தில் பல தடவைகள் உச்சரிக்கும் ஸ்வரம்
 1) வின்னியாசம்  2) நியாசம்  3) தாரம்  4) பகுத்துவம்  5) அல்பத்துவம்

21. உபதாள வாத்தியங்களுள் ஒன்று.
 1) வீணை  2) கடம்  3) தம்புரா  4) மிருதங்கம்  5) தவில்

22. “மகாநாடக வீணை என அழைக்கப்படும் வாத்தியம்
 1) சித்தார்  2) வயலின்  3) கோட்டு வாத்தியம்
 4) தம்புரா  5) சாரங்கி

23. ஸரிகமதாநிஸ் - ஸ்நிஸ்தாபமபகாமரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்.
 1) ரதி கௌளை  2) வசந்தா  3) கானடா  4) ஹிந்தேளம்  5) மோகனம்

24. “ஒரு பொழுதும்” என்ற திருப்புகழ் அமைந்துள்ள தாளத்தின் அங்கங்கள்.
 1) $|_3 |_3$ 00  2) $|_5$ 00  3) $|_4$ 0 $|_4$  4) $|_9$ ∪ 0  5) $|_3$ ∪ 0



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

25. "ஞானம் அருள்வாய்" என்ற கீர்த்தனையில் அனுபல்லவி அமைந்துள்ள எடுப்பு
1) அனாகதம் 2) சமம் 3) அதீதம் 4) விச்ராந்தி 5) அதி அதீதம்

26. ஹிந்துஸ்தானிய இசையில் "மால்கௌஸ்" என அழைக்கப்படுவது
1) ஹிந்தோளம் 2) காபி 3) ஆனந்தபைரவி 4) கமாஸ் 5) ஶ்ரீறஞ்சனி

27. "அலகுயாழ்" எனும் பெயரினை உடைய வாத்தியம்
1) வயலின் 2) கடம் 3) முகர்சிங் 4) தம்புரா 5) கெஞ்சிரா

28. "ரிஷ்ய சிருங்கார்", "இது நிஜமா" என்ற திரைப்படங்கள் மூலம் தனது திறமையினை வெளிப்படுத்தியவர்.
1) M.S சுப்பிலட்சுமி 2) வீணை பாலச்சந்தர் 3) M.L வசந்த குமாரி
4) ராஜரட்ணம் பிள்ளை 5) D.K பட்டம்மாள்

29. ஸ்வரப் பலகையில் கற்ற Doe a deer a female deer எனும் பாடல் அமைந்த Scale இற்கு இணையான கர்நாடக இராகம்.
1) கல்யாணி 2) சங்கராபரணம் 3) பிலகரி 4) மோகனம் 5) மாயாமாளவகௌளை

30. ஹிந்துஸ்தானிய இசையில் தாட்முறைகளை அறிமுகப்படுத்தியவர்.
1) தான்சேன் 2) அமீர்குஸ்ரு 3) பாத்கண்டே
4) பாக் 5) மொசாட்

31. மாதயை எனும் சௌக்காலக் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் மேள எண்.
1) 15 2) 16 3) 17 4) 22 5) 28

32. ஆனந்த பைரவி இராகத்தில் இடம் பெறும் அன்னியஸ்வரங்கள்.
1) பிரதி மத்திமம், சுத்த மத்திமம் 2) அந்தர காந்தாரம், காகலி நிஷாதம்
3) சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம் 4) அந்தர காந்தாரம், சுத்த தைவதம்
5) அந்தர காந்தாரம், சுத்த நிஷாதம்

33. "மைதான்" எனும் பாகத்தினை உடைய இசைக்கருவி
1) கடம் 2) கெஞ்சிரா 3) மிருதங்கம் 4) தபேலா 5) ஸாரங்கி

34. சங்கீர்ண மட்டிய தாளம் கண்டகதி பேதம் அடையும் போது கிடைக்கும் மொத்த எண்ணிக்கை
1) 60 2) 70 3) 84 4) 100 5) 140

35. வீணையில் காணப்படும் தந்திகளை விட கோட்டு வாத்தியத்தில் மேலதிகமாகக் காணப்படும் பிரதான பாட்டுத் தந்தி
1) பஞ்சமம் 2) பக்க பஞ்சமம் 3) ஸாரணி 4) பக்க ஸாரணி 5) ஹெச்சு ஸாரணி

36. "வீடலால வாயிலாய்" எனும் தேவாரம் அமைந்துள்ள பண்
1) பழந்தக்கராகம் 2) தக்கேசி 3) காந்தாரம் 4) குறிஞ்சி 5) கௌசிகம்

37. ஸங்க்ரம ராகம், மிஸ்ர ராகம் என்ற பெயர்களால் அழைக்கப்படும் இராகப் பிரிவு
1) சாயகை ராகம் 2) சங்கீர்ண ராகம் 3) சுத்த ராகம்
4) ஜனக ராகம் 5) கன பஞ்சமம்

38. திருநாவுக்கரசரது திருநேரிசை பதிகம் பாடப்படும் பண்
1) கொல்லி 2) தக்கேசி 3) குறிஞ்சி 4) சாதாரி 5) சீகாமரம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

39. திரி அன்னியஸ்வர பாஷாங்க ராகமாக விளங்குவது.
   1) ஹிந்தோளம் 2) ஆபேகி 3) ஹிந்துஸ்தான் காபி
   4) கர்நாடக தேவகாந்தாரி 5) அமிர்தவர்சினி

40. வீணை பாலச்சந்தருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய நிறுவனம்.
   1) கிருஷ்ணகான வபா 2) அகில உலக நுண்கலை கலாசார அக்கடமி
   3) பாரதீய வித்யாபவன் 4) சென்னை பல்கலைக் கழகம்
   5) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

41. நாட்டார் பாடல்களை இசைப்பதற்கு மிகப் பொருத்தமான தாளம்.
   1) தேசாதி தாளம் 2) ரூபக தாளம் 3) சரபந்தன தாளம்
   4) சாபு தாளம் 5) ஸிம்மந்நதன தாளம்

42. பின்வரும் விவாதி தோஷமுள்ள இராகங்களின் தொகுதிகளுள் மிகப் பொருத்தமானது.
   1) தானரூபி, ஹனுமதோடி, நடனபைரவி, கல்யாணி, சாருகேசி
   2) மாயாமாளவ கௌளை, ஹரிகாம்போதி, ஷண்முகப்பிரியா, தர்மவதி
   3) ரத்னாங்கி, கான மூர்த்தி, வனஸ்பதி, மானவதி, சக்கரவாகம்
   4) கனகாங்கி, ஸேனாவதி, காயகப்பிரியா, ஜங்காரத்வனி, மாரரஞ்சனி
   5) ராகவர்த்தனி, காங்கேய பூவுணி, வாகதீஸ்வரி, சூலினி, சலநாட

43. "நீ போய் அழைத்து வாடி" பதம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண அவரோகணம்
   1) ஸரிகபதஸ் - ஸநிதபமகஸ 2) ஸகமதநிஸ் - ஸ்நிதநிபகாமரிஸ
   3) ஸரிமபநிஸ் - ஸ்நிதநிபமகாரிஸ் 4) ஸபமபதநிஸ் - ஸ்நிதமகஸா
   5) ஸரிகமதாநிஸ் - ஸ்நிதமகரிஸ்

44. மாமூண்டியா பிள்ளை என்பவரால் வாசித்துப் பிரபல்யமான வாத்தியம்.
   1) கெஞ்சிரா 2) கடம் 3) முகர்சிங் 4) தபேலா 5) மிருதங்கம்

45. "உன்னையன்றி" என்ற கீரவாணி வர்ணத்தில் நான்காவது எத்துக்கடைஸ்வரம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரங்கள்
   1) 08 2) 16 3) 32 4) 64 5) 128

46. பதம் எனும் உருப்படியின் சிற்பி எனப்படுபவர்.
   1) வேங்கடமகி 2) சியாமாசாஸ்திரிகள் 3) பாபநாசம் சிவன்
   4) பொன்னையாபிள்ளை 5) ஷேத்ரக்ஞர்

47. "இனியாட முடியாது திருவுளமிரஸ்கி" என்ற பாடல் வரி காணப்படும் கீர்த்தனை
   1) உன்னையல்லால் 2) ஞானம் அருள்வாய் 3) சிவசிவசிவ
   4) பார்வதி நாயகனே 5) சரஸ்வதி வதியுவதிம்

48. பின்வரும் கூற்றுக்களுள் மனோதர்ம இசைக்குப் பொருத்தமற்ற கூற்றுக்களைக் கொண்ட தொகுதி
   A. இராக ஆலாபனை செய்தல்.
   B. கற்பனைஸ்வரம் மனனம் செய்தல்.
   C. பல்லவி பாடுதல்.
   D. பாடகரின் கற்பனைத்திறனை வெளிப்படுத்தல்.
   E. இசை உருப்பகளைப் பாடுதல்.
   1) C, E 2) B, E 3) A, C 4) A, D 5) A, E

49. "மாதர் மடப்பிடியும்" என்ற தேவாரம் அமைந்துள்ள பண்
   1) குறிஞ்சி 2) பழம்பஞ்சுரம் 3) யாழ்முரி 4) சீகாமரம் 5) காந்தாரம்

50. "தீம்தனன" என்ற பிருத்தாவனி ராகத் தில்லானவை இயற்றியவரின் முத்திரை
   1) மாதுரி 2) குருகுக 3) கிருஷ்ணா 4) முரளி 5) வேங்கட

(50 x 2 = 100 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**நான்காம் தவணைப் பரீட்சை - 2023**

# National Field Work Centre, Thondaimanaru.

**4th Term Examination - 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| **கர்நாடக சங்கீதம் II** | **Three Hours** | **55** | **T** | **II** |
| **Music II** | **Gr -13 (2023)** | | | |

## பகுதி II

❖ **"அ" பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## "அ" பகுதி

*01.* **சுருக்கமான விடை தருக.**

1) சுருதி நிர்ணயிக்கப்பட்ட துணைத்தாள வாத்தியம் எது?
2) தாலாட்டுப் பாடல்கள் ஊஞ்சற்பாடல்கள் பாடப்படும் இராகம் யாது?
3) தாதுவின் அமைப்பில் கீதத்தினை ஒத்திருக்கும் உருப்படி எது?
4) குஜரி எனும் பாகத்தினை உடைய வாத்தியம் எது?
5) ஸரிகமபதநீ – ரிகமபதநிஸ்ா என்ற ஸ்வரக் கோர்வைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள கமகம் யாது?
6) மிஸ்ர ஜாதி அடதாளம் கண்டகதி அடையும் போது கிடைக்கும் மொத்த எண்ணிக்கை யாது?
7) $\underset{8}{\cup}$ இக்குறியீடு குறிக்கும் அங்கத்தின் பெயர் யாது?
8) தெலுங்கு மொழியில் பல தருக்களை இயற்றியவர் யார்?
9) வாசஸ்பதி இராகத்தின் நேர் சுத்த மத்திம இராகத்தின் மேள எண் யாது?
10) காயக பாணி முறையினை வீணையில் அறிமுகம் செய்தவர் யார்?
11) திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்களில் இடம் பெறும் பாவினங்கள் இரண்டினைத் தருக.
12) அயன் வாத்தியங்களுள் இரண்டினைத் தருக.
13) கு. மி என்ற சங்கேதங்களைக் குறிக்கும் ஸ்வரப்பெயர்கள் இரண்டினையும் தருக.
14) கனபஞ்சக இராகங்களுள் இரண்டினைத் தருக.
15) வேங்கடமகி அவர்களின் முத்திரைகள் இரண்டினைத் தருக.

## "ஆ" பகுதி

02\. 1) ஜனக ராகத்தின் நான்கு பண்புகளையும் தருக. (6 புள்ளிகள்)

2) பின்வரும் ஜன்னிய ராகப் பிரிவுகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்களையும் ஆரோகண அவரோகணங்களையும் தருக.
   (1) உபாங்க ராகம்
   (2) பாஷாங்க ராகம்
   (3) நிஷாதாந்திய ராகம்
3) வர்ஜ ராகப் பிரிவுகளைக் குறிப்பிடுக.
4) வக்ர ராகப் பிரிவுகளை உதாரணங்களுடன் விளக்குக.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(2 x 10 = 20 புள்ளிகள்)

03. பின்வரும் உருப்படிகளில் இரண்டிற்கு விளக்கம் தருக.
   1) சூளாதி
   2) இராகத்தின் லட்சணம் கூறும் உருப்படி
   3) தரு (2 x 10 = 20 புள்ளிகள்)

**“இ” பகுதி**

04. பின்வரும் இராகங்களுள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றிற்கு விரிவான லட்சணம் தருக.
   1) வசந்தா
   2) ஸரிகமதஸ - ஸ்தமகரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய ராகம்.
   3) பைரவி (2 x 10 = 20 புள்ளிகள்)

05. 1) வயிற்றுடன் அணைத்து வாசிக்கப்படும் துணைத்தாள வாத்தியம் யாது?
   2) அதனுடைய படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
   3) முகர்சிங் வாத்தியம் வாசிக்கும் முறையினை விளக்குக.
   4) கெஞ்சிரா வாத்தியத்தின் அமைபபினை விளக்கி அதனை வாசித்துப் பிரபல்யமடைந்த மூன்று கலைஞரின் பெயர்களைத் தருக. (20 புள்ளிகள்)

06. அருணகிரிநாதர் தொடர்பாக பின்வரும் வினாக்களிற்கு விடைதருக.
   1) இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் மூன்றினைத் தருக.
   2) அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள் மூன்றினைத் தருக.
   3) இவரது வாழ்க்கை வரலாற்றினைக் கூறுக.
   4) இவர் இசைக்காற்றிய தொண்டினை விளக்குக. (20 புள்ளிகள்)

07. நீர் கற்ற ஓர் அடதாள வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியினை ஸ்வர சாகித்திய தாள அங்கக் குறிகளுடன் எழுதுக.
(இராகம், தாளம், ஆரோகண அவரோகணம் இயற்றியவர் பெயர் குறிப்பிடல் வேண்டும்.)
(20 புள்ளிகள்)

08) 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கர்நாடக இசை வளர்ச்சி பற்றி விளக்குக.

அல்லது

நீர் பார்த்து இரசித்த கர்நாடக இசைக்கச்சேரி ஒன்றின் விமர்சனம் எழுதுக.
(20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk